# Resettlement and its Challenges Confronting Normal Life: A Study of Keppapilavu People Resettled in Seeniyamoddai Model Village

## மீள்குடியேற்றமும் இயல்புவாழ்க்கைக்கு எதிரான சவால்களும்: சீனியாமோட்டை மாதிரிக் கிராமத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட கேப்பாப்பிலவு மக்களை மையப்படுத்திய ஆய்வு

**Dhivyaa S.D.M.R.[1] & Riswan M.[2]**

**Abstract**

Aftermath of civil war in Sri Lanka, many resettlement projects were carried out by the government, especially in the North and the Eastern provinces with the support of donor agencies. The model village is also constructed and handed over to the public use in Seeniyamoddai area of Mullaitivu district where many people were resettled including Keppapilavu villagers. Even though the Kappapilavu people were resettled, they are facing numerous challenges to come back to their normal life. This paper aimed at understanding the challenges confronting normal life of Keppapilavu people those who were already settled in Seeniyamoddai model village with certain facilities consequently. Thus, the data for this research were gathered from primary as well as secondary sources. Interview with five respondents; and two focus group discussion were conducted for collecting primary data, and secondary data have collected from newspapers, previously conducted researches and electronic sources. This study found that many challenges faced by the Keppapilavu people to return their normal life. According to the findings they seriously facing lot of difficulties, such as; land issue (nearly 279 acres of land is now administered by the military forces); their economy is depends and livelihood also seriously affected; many women-headed families has been increased; lack of education, health and other infrastructure facilities; and psycho-social challenges including disability, missing-persons and other war traumas reminding their passed devastation. Though, this situation creates numerous problems among the Keppapilavu people in this study area and they are highly threatened to health hazards and social risks. Thus, this study need to be extended in order to find new result and put forward new recommendations to the policy makers in future.

**Keywords:** Resettlement, Keppapilavu, Manik Camp, Model Village, Psychological Trauma, War Victims

To whom correspondence should be addressed: divyrex@gmail.com

[1] Assistant Lecturer in Sociology, Department of Sociology, South Eastern University of Sri Lanka.

[2] Lecturer, Department of Sociology, South Eastern University of Sri Lanka.

**அறிமுகம்**

மூன்று தசாப்தகாலமாக இராணுவத்தினருக்கும் விடுதலை புலிகள் தரப்பினருக்கும் ஏற்பட்ட மோதலினால் வடக்கு- கிழக்கு பிரதேசத்தினை சேர்ந்த மக்கள் இடப்பெயர்வு தொடர்பான பல சவால்களுக்கு முகங்கொடுத்தனர். நீண்ட கால யுத்தத்தின் வெளியீடாக 300,000 வட மாகாண மக்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தனர் (IDMC Report, 2008). இவ்வாறு இடம்பெயர்ந்து வாழ்வோர் முகாம்களில் தங்க வைக்கப்படும் போது அடிப்படை தேவைகள் தற்காலிகமாகவே நலன்புரி அமைப்புக்களால் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. வவுனியா மாவட்டத்திலும் அவ்வாறே நலன்புரி அமைப்புக்களால் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டு வந்தது. அதன் பின் அரசாங்கத்தின் ஊடாக வடக்கு பிரதேசத்தில் மீள்குடியமர்த்தப்படும் நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.


மீள்குடியமர்த்தல் என்பது “ திட்டமிடப்பட்டு ஒத்துழைப்பு வழங்கும் செயன்முறையில் மக்களின் வாழ்விடத்தினை மாற்றும் உள்ளடக்கம்”என விளக்கப்படுத்தப்படுகிறது (குகபாலன், 2016). குறிப்பிட்ட மக்கள் குழுக்களை புதிய ஒரு இடத்தில் வாழ்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு, அம் மக்களை அவ்விடத்தில் குடியமர்த்தல் என Planet work NGO குறிப்பிட்டுள்ளது. இன்னொரு வகையில் நீண்டகாலமாக வீடற்ற அழிவுறுநிலையிலுள்ள மக்களுக்கு நிரந்தரமான வசிப்பிடத்தை பூரண வசதியுடன் பெற்றுக் கொடுப்பதுடன், எக் காரணத்தினாலும் அம் மக்கள் அவ்வசிப்பிடத்தை விட்டு செல்லக் கூடிய நிலை ஏற்படாது என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்வதே மீள் குடியமர்த்தல் என்பதை வேறுப்பட்ட வகையில் சுற்றாடல் திணைக்களத்தவன் 1995ம் ஆண்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் மீள் குடியமர்த்தல் என்பது மக்களை பாதுகாக்கும் இன்றியமையாத கருவியாகும் அத்துடன் சர்வதேச ரீதியாக அகதிகள் பிரச்சினைக்கு நிலையான தீர்வுகளை முன்வைக்கும் பொறிமுறையாகும். ஓர் அரசு அகதிகளை மீள்குடியமர்த்தும் போது சட்ட மற்றும் உடல் ரீதியான பாதுகாப்பையும், குடியியல், அரசியல், பொருளாதார மற்றும் சமூக கலாச்சார உரிமைகளையும் சர்வதேச ரீதியான தரமளவிற்கு உறுதிப்படுத்துகின்றது (UNCHR 2015).

எனவே தற்கால போக்கில் இலங்கையில் மீள்குடியமர்த்திய மக்களின் பிரச்சினை பிரதான ஒரு சவாலாக காணப்படுகிறது. அதிலும் முல்லைத் தீவு மாவட்டத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட கேப்பாபிலவு கிராம மக்கள் தொடர்பான பிரச்சினை பாரிய ஒரு சவாலாகவும் அதே வேளை அம்மக்களின் வாழ்க்கை கேள்விக்குரியாகவும் காணப்படுகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தில் அதிகளவு பாதிப்புகளுக்குள்ளாக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒரு கிராம சேவகப் பிரிவினை மையப்படுத்தியாதாக இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டடுள்ளது. முல்லைத் தீவு மாவட்டத்தில் ஆறு பிரதேச செயலக பிரிவுகள் காணப்படுகின்றன. அவையாவன, கரைதுறைப்பற்று, மணலாறு, மாந்தை கிழக்கு, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய். அவற்றுள் கரைதுறைப்பற்று பிரதேசத்தில் 08 கிராம சேவகப் பிரிவுகள் காணப்படுகின்றன. இவற்றுள் கேப்பாபிலவு கிராம சேவக பிரிவில் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுப்பிரதேசமான கேப்பாபிலவில் 115 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டன. கேப்பாபிலவு பிரதேசத்தின் குடிப்பரம்பலை நோக்கும் போது 1200 மக்கள் வாழ்கின்றனர். அம் மக்கள் வாழும் நிலப்பரப்பில் 341 ஏக்கர் நிலம் இராணுவத்தினரின் கைவசம் காணப்பட்டு, அண்மையில் மக்களின் போரட்டத்தின் பின்னர், நான்கு கிராமங்களின் காணிகள் குறிப்பிட்டளவு விடுவிக்கபட்டுள்ள போதும், கேப்பாபிலவு கிராமம் மாத்திரம் முற்றாக விடுவிக்கபடவில்லை (பிரதேச செயலக பிரிவு – கரைதுறைப்பற்று,2016).

படம் 1.1: ஆய்வுப் பிரதேசம்: கேப்பாபிலவு கிராமம்




மூலம்: கரைதுறைப்பற்று பிரதேச செயலக அறிக்கை 2016

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திறகுட்பட்ட கேப்பாபிலவில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் முப்பது வருடங்களாக இனத்துவ ரீதியான பிரச்சினையால் சமூக, பொருளாதார மட்டத்தில் அதிகளவு பாதிப்புகளுக்கு முகங் கொடுத்துவந்த நிலைமை 2009 ஆம் ஆண்டுடன் தான் முடிவுற்றது. இதன் பின் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வசித்த மக்கள் மீண்டும் குடியமர்த்தப்படும் போது அதிகளவான நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.

பொதுவாகவே மீள்குடியமர்த்தப்படும் செயன்மறையானது மறுசீரமைப்பு, ஒன்றுபடுத்தல் மீள் கட்டமைப்பு செய்தல் மற்றும் மீள் கட்டமைத்தல் என்பவற்றை உள்ளடக்ககியது. கேப்பாாபிலவு மக்களின் வாழ்க்கை முறையானது மாதிரி கிராமிய (Model Village) முறையில் மீள்குடியமர்த்தல் மேற்கொள்ளப்பட்டது. இச் செயற்றிட்டம் மீள்குடியேற்ற அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டது. கேப்பாபிலவு கிராமத்தை சேர்ந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட 287 குடும்பங்கள் வவுனியா மனிக் முகாமில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டனர். இம் மக்களின் சொந்த காணிகள் உயர்பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டு அவை இராணுவத்தின் கட்டுப்பாட்டினுள் காணப்படுவதால், அவர்களுக்கான மீள்குடியேற்றத்துக்காக முன்வைக்கப்பட்ட ஒரு செயற்றிட்டமே மாதிரி கிராமம் ஆகும். இதன்படி கேப்பாபிலவு கிராம மக்களின் சொந்த இருப்பிடங்களுக்கு பதிலாக அடிப்படை வசதிகள் அடங்கிய ஒரு மாதிரி கிராமியத் திட்டம் சீனியாமோட்டை கிராமத்தில் முன்வைக்கப்பட்டது. மாதிரி கிராம செயற்றிட்டம் இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டது. இம் மாதிரியில் முதலாவது கட்டத்தில் வீடுகள், 05 பொதுக்கிணறுகள், 10 குழாய் கிணறுகள், 165 மலசலகூடங்கள், ஆரம்பநிலை பாடசாலை, வடிகாலமைப்பு வசதிகள், சனசமூக நிலையம், வீதி ஆகிய உட்கட்டமைப்பு வசதிகளை உள்ளடக்கப்பட்டது. முதலாவது கட்டமாக 2013 ஆம் ஆண்டில் 165 வீடுகள் அமைக்கப்பட்டு அவை 165 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. இரண்டாவது கட்டத்தில் தொடர்ந்து முறையே 2014ம் ஆண்டில் 78 வீடுகளும், 2015ம் ஆண்டில் 44 வீடுகளும் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டன. இவ் வீடமைப்பு திட்டத்திற்கு 35553760 ரூபா ஒதுக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை 2015 ஆம் ஆண்டுக்கான மீள்குடியேற்ற அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இடைத்தங்கல் முகாமில் தொடர்ந்து நான்கு வருடங்கள் சிக்கலான அமைப்பில் வாழ்க்கையினை நடாத்திப பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்ட மக்கள், மாதிரி கிராமத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட பின்னரும் இன்றளவிலும் இயல்பான நிலைக்கு திரும்பவில்லை. தொடர்ச்சியான இடப்பெயர்வுக்கு முகங்கொடுத்து மீள் குடியமர்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கை முறை, பொருளாதார முறை,

வாழ்க்கை கட்டமைப்பு என அனைத்துமே மாற்றமடைந்து விடுகின்றது. தொடர்ச்சியாக யுத்தத்திற்கும், இடப்பெயர்வுகளுக்கும், உயிர்- உடமை இழப்பிற்கும் முகம் கொடுத்த மக்கள், மனதளவில் சோர்வடைந்தது மாத்திரமின்றி பொருளாதார பலத்தையும் மீள்கட்டமைக்க வேண்டிய நிலையில் உள்ளனர். இவ்வாறு பல நெருக்கடிகளுக்கு மத்தியில் யுத்த தடயங்களை மறந்து இயல்பு வாழ்க்கைக்கு உள்வாங்குவது என்பது குறுகிய காலத்தில் சாத்தியமான விடயமல்ல.

எனவே கேப்பாபிலவு கிராமத்தினை சேர்ந்த மக்கள், மீள்குடியமர்த்தப்பட்ட பின் மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவதிலும் தமது சுய அபிவிருத்திக்கும் எதிராக உள்ள சவால்களை இனங்காணும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வு முல்லைத்தீவு மாவட்டத்தின், கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட கேப்பாபிலவு எனும் கிராம சேவகப்பிரிவினை மையப்படுத்தியுள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

மனிக் முகாமில் வசித்த கேப்பாபிலவு கிராம மக்கள் அவர்களுடைய சொந்த காணிகளில் குடியமர்த்தப்படாமல் சீனியாமோட்டையில் அமைக்கப்பட்ட மாதிரி கிராமத்திலே மீள்குடியமர்த்தப்பட்டனர். மீள்குடியேற்ற திட்டத்தின்படி அம் மக்களின் வாழ்க்கை இயல்பானதாக சவால்களின்றி காணப்பட வேண்டும். ஆனால் இக் கிராம மக்கள் மீளவும் தமது சொந்த காணிகளை தருமாறு கோரி போராட்டம் நடாத்துவது மாதிரி கிராமத்தில் வாழ்வதற்கு இயவாமையே காரணமாகும். எனவே, அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள்கொண்ட இடத்தில் மீள் குடியேற்றம் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அங்கு குடியமர்த்தப்பட்ட மக்கள் தமது இயல்ப வாழ்க்கை தொடர்பில் எத்தகைய சவால்களை எதிர்கொள்கின்றார்கள் என்பதை கண்டறிவது இங்கு ஆய்வுப் பிரச்சினைக முன்வைக்கப்பட்டுள்ளது.

**ஆய்வு நோக்கம்**

வவுனியா மனிக் முகாமிலிருந்து சீனியாமோட்டையில் குடியமர்த்தப்பட்ட கேப்பாபிலவு மக்கள் தமது இயல்பு வாழ்க்கைக்கு திரும்பவதில் எதிர்நோக்கும் சவால்களை இனங்காண்பது இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வு முறையியல்**

பண்பு ரீதியான ஆய்வாக இது அமைந்துள்ளமையால், முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவுகள் இரண்டு இலக்கக் குழு கலந்துரையாடல், 05 நேர்காணல் ஊடாக தகவல்கள் சேகரிக்கப்பட்டன. நேர்காணலுக்குரிய மாதிரிகள் நோக்க மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டதுடன், கிராம சேவகர், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், அதிபர், போரினால் அதிகளவு பாதிப்படைந்த உயிரிழப்புக்களை சந்தித்த நபர்களையும் கொண்டு இலக்கக் குழு கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத்தரவுகள் பத்திரிக்கை, இணையத்தளம், ஏலவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக்ள ஊடாக சேகரிக்கப்பட்டன.

**இலக்கிய மீளாய்வு**

Wasana Nalawatta மற்றும் Sahlini Weeraratne ஆகியோரர் மேற்கொாண்ட Reconciliation in Post War Sri Lanka: Issues and Prospects எனும் ஆய்வில் இலங்கையில் யுத்த காலப்பகுதியில் வட பகுதியை சேர்ந்த தமிழ் மக்கள் வட பகுதியை விட்டு வெளியேறவும் அதேவேளை நாட்டில் ஏனைய பகுதிகளில் வாழும் சிங்கள மக்கள் வடபகுதிக்கு செல்லவும் பாதுகாப்பினை கருத்திற் கொண்டு தடை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் யுத்தத்திற்கு பின்னர் மக்கள் நாட்டின் சகல பகுதிகளுக்கும் செல்லக் கூடியதாக காணப்பட்டது. தற்போதைய நடைமுறையை பொருத்தமட்டில் நாட்டில் வட

பகுதிக்கும் ஏனைய பிரதேசங்களுக்குமிடையிலான தொடர்புகள் அதிகரித்துள்ளன. யுத்தத்திற்கு பின்னரான உட்கட்டமைப்பு வசதிகள், பொருளாதாரம், கல்வி என்பன வளரச்சியடைந்துள்ளன. அரசாங்கம் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. இருப்பினும் யுத்தத்தினால் நேரடியாக பாதிக்கப்பட்ட மக்கள் சமூகத்தில் ஏனைய மக்களிற்கு சமமான சமூக அந்தஸ்த்தினை பெற்றவர்கள் என்ற மனோநிலைக்கு விருத்தியாகவில்லை. அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் சமூக கூட்டொருமைப்பாடு விருத்தியாக்கப்படாமை பாதிக்கப்பட்ட மக்கள் இயல்பான வாழ்க்கைக்கு உள்வாங்கப்படாமைக்கு காரணம் என பல விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனினும் இது இலங்கையின் மீள்குடியிருப்பு தொடர்பான ஒரு பொதுவான நோக்காக உள்ளமையை அவதானிக்கலாம்.

TGUP. Perera மற்றும் Indu Weerasoori மேற்கொண்ட ஆய்வில் மீள்குடியேற்றம் தொடர்பான கருத்துக்களை முன்வைக்கும் போது பின்வருமாறு குறிப்பிடுகின்றனர். மீள்குடியேற்றம் என்பது பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதாகும். வீடமைப்பு, சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு என்பவற்றை உள்ளடக்கியதே மீள்குடியமர்த்தல் செயன்முறைகளாகும். எனவே இச் செயன்முறையின் போது பொருளாதார விருத்தி நடவடிக்கை முக்கிய கூறாகும். ஒரு முழுமையற்ற மீள்குடியமர்த்தல் திட்டமானது வேலைவாய்பற்ற நிலைமை, சமூக ரீதியாக ஓரங்கட்டப்படல், நோய் தொற்றுக்கள், உணவுப் பாதுகாப்பின்மை போன்ற பிரச்சினைகளை தொடர்ச்சியாக ஏற்படுத்தும். எனவே மீள்குடியமர்த்தும் செயற்றிட்டத்தின் போது சமூக, பொருளாதார, சுகாதரம் ஆகிய மூன்று விடயங்களையும் தொடர்புபடுத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடுகின்றனர்.

IDMC இனால் முன்வைக்கப்பட்ட அறிக்கையின்படி இலங்கையில் மீள்குடியமர்த்தலின் போது பெண்கள் அதிகமான சவால்களை எதிர்கொள்வதாக முன்வைக்கப்பட்டுள்ளது. இதன்படி பாதுகாப்பு, முறையற்ற உட்கட்டமைப்பு, பெண்- தலைமையிலான குடும்பத்தை சேர்ந்த பிள்ளைகள் கல்வியை தொடர முடியாமை, ஆண் துணையின்றி விவசாயம் மேற்கொள்ள முடியாமை, ஒரு சில வரையறைக்குட்பட்ட கூலித்தொழில்கள் மாத்திரம் பெண்கள் மேற்கொள்ள கூடிய சூழ்நிலை, ஒரே வகையான கூலித்தொழிலிற்கு ஆண் பெண் இருபாலாருக்கும் ஏற்றத்தாழ்வான சம்பளத்தொகை வழங்கப்படல் போன்ற பிரச்சினைகள் பெண்கள் எதிர்நோக்குவதாக இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

The Political Economy of Post War Sri Lanka எனும் ஆய்வில் இலங்கையின் மீள்குடியமர்த்தல் நடவடிக்கைகள் தொடர்பாக குறிப்பிடுகையில், யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்தி நடவடிக்கைகள் சமூகத்தில் சமத்துவமற்ற அபிவிருத்தியை ஏற்படுத்தியுள்ளதாகவே கூறப்பட்டுள்ளது. வளங்கள் சமமாக பகிரப்படாமை, அதிகளவு கல்வித் துறை ரீதியான வாய்ப்புக்கள் நகர்புர மாணவர்களுக்கு கிடைக்கப்பெறல், வடபகுதி மக்கள் சிங்களம் மற்றும் ஆங்கில மொழியில் கற்பதில் கடந்த காலத்தில் காணப்பட்ட சவால்களால் வேலைவாய்ப்புக்களை பெறுவதிலுள்ள சிரமம் போன்ற காரணிகள் சமூக சமத்துவமின்மைக்கு ஆழமான காரணிகளாக Sunil Bastin என்பவரால் முன்வைக்கப்பட்டுள்ளது. எனவே, மீளாய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட ஆய்வுக்கட்டுரைகளும், அறிக்கைகளும் மீள் குடியேற்றப்பட்ட இடங்களில் காணப்படக்கூடிய பல்வேறுபட்ட பிரச்சினைகளை பிரதானமாக நோக்கியுள்ளன. எனினும் இலங்கையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் மாதிரிக் கிராமங்களில் அதிகமாக குடியேற்றப்பட்ட இடங்கள் வட மாகாணத்தில் இருக்கின்ற அதேவேளை அவைகள் பற்றிய மீள் வாசிப்பு அவசியமாக இருக்கின்றது. குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாப்பிலவு மக்கள் மீள்குடியேற்றப்பட்ட பின்னரும் தமது இயல்புவாழ்க்கை தொடர்பில் எதிர்நோக்கும் சவால்கள் பற்றிய பார்வை குறைவாக செலுத்தப்பட்டிருப்பதானது இவ்வாய்வினை மேற்கொள்ளத் தேவையான இடைவெளியை வழங்கியுள்ளது.

**பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்**

மீள்குடியமர்த்தல் செயன்முறையில் மக்களுடைய வீடமைப்பு, பொது சேவைகளான கல்வி, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, வைத்தியசாலை, போக்குவரத்து வசதிகள் உட்பட மீள்கட்டமைப்பு, மீள சமூகத்தை ஒருங்கிணைத்தல் ஆகிய விடயங்களை மிக முக்கியமாக கவனத்திற் கொள்வதுடன் அதற்குரிய வளங்களும் போதியளவில் காணப்படுகின்றதா என்பதை கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். ஆனால் கடந்த யுத்தத்தினால் அதிகளவு பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு பிரதேசத்தில் மீள்குடியமர்த்தலுக்குரிய அபிவிருத்தி ஒழுங்குகள் பூர்த்தியாகாமலே மக்கள் மாதிரி கிராமத்தில் மீள்குடிமர்த்தப்பட்டமையே ஏனைய பிரச்சினைகளுக்கு தோற்றுவாயாக அமைந்துள்ளமை அவதானம் மற்றும் நேர்காணலினூடாக இனங்காணப்பட்டது. கேப்பாபிலவு கிராம சேவகப்பிரிவிற்குட்பட்ட மக்கள் மாதிரி கிராமத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட பின்னரும் அவர்களின் வாழ்க்கை இன்றளவிலும் யுத்தம் நிறைவுற்ற காலப்பகுதியில் காணப்பட்ட தரத்திலே அபிவிருத்தியடையாமல் உள்ளது. எனவே மீள்குடியமர்த்தப்பட்டுள்ள மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு மீண்டும் திரும்புவதில் மாதிரி கிரமத்தில் உள்ள சமூக சவால்கள் ஆய்வினூடாக பின்வருமாறு அடையாளப்படுத்தப்பட்டது.

**உட்கட்டமைப்பு பிரச்சினைகள்**

உட்கட்டமைப்பு ரீதியான பிரச்சினைகளை நோக்கும் போது, கேப்பாபிலவு பிரதேசத்தில் போக்குவரத்து வசதிகள் விருத்தி செய்யப்படவில்லை. பிரதான பாதைகள் சீரமைக்கப்பட்ட போதிலும், கேப்பாபிலவின் உள் வீதிகள் சீரமைக்கப்படாமல் காணப்படுவதால் 60 கிலோமீற்றர் தூரத்தை அண்ணளவாக 3 மணித்தியாலங்கள் பேருந்து பயணத்தின் செலவழிப்பதன் மூலமே சென்றடையலாம். மேலும், பேருந்து வசதிகளும் குறைவாக காணப்படுகின்றது, மாலை ஐந்து மணிக்கு பின்னர் பேருந்து சேவைகள் இல்லை. மற்றும் யுத்தத்தின் காரணமாக வீடுகளை இழந்த மக்களுக்கு வீடமைத்து கொள்வதற்கு ஒரு குடும்பத்திற்கு அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட 75000 ரூபா பணத்தொகை அவர்களுக்கு பற்றாக்குறையாகவே உள்ளது. அத்துடன் ஒரு வீடு 24x10 சதுர அடிக்கு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மக்களுக்கு மிக அடிப்படை தேவையான குடிநீர் வசதி ஏற்பாடு செய்யப்பட்டபோதும் அது உவர் நீராக காணப்படுவதால் மக்கள் அதனை உபயோகப்படுத்த முடியாத நிலை காணப்படுவதாக நேர்காணலில் தெரிவிக்கப்பட்டது. முற்காலத்தில் குடிநீருக்கு உபயோகப்படுத்தப்பட்ட கிணறுகள் யுத்தத்தின் பின்னர் பாதிக்கப்பட்டமையால், தற்போது 1 லீற்றர் குடிநீரை ஐந்து ரூபாவிற்கு கொள்வனவு செய்கின்றனர எனவே நிரந்தரமாக நீர் வசதியை மக்களால் ஏற்பாடு செய்ய முடியாத காரணத்தால், பல மக்கள் தமது அயலவர்களின் கிணற்றிலே நீர்பாவனைக்கு தங்கியுள்ளனர். கேப்பாபிலவில் பொதுக்கிணறுகள் அத்துடன் குழாய்கிணறுகள் அமைக்கப்பட்ட போதிலும் மக்களிடையே நீருக்கான தட்டுப்பாடு காணப்படுகின்றது.

**சுகாதார வசதிகள் இன்மை**

மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள கேப்பாபிலவு பிரதேசத்தில் மக்களின் சுகாதார தேவைகளுக்காக வைத்தியசாலை அமைக்கப்படவில்லை. ஆய்வுப் பிரதேச மக்கள் மாஞ்சோலை ஆதார வைத்தியசாலைக்கே செல்கின்றனர். யுத்தம் நடைபெறும் காலக் கட்டத்திலும் இப்பிரதேச மக்கள் சுகாதார தேவைகளுக்கு புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கே சென்றுள்ளனர் என்பதை நேர்காணலின் ஊடாக அறிய முடிந்தது. கர்ப்பிணி தாய்மார்களும் பிரசவத்திற்காக மாஞ்சோலை வைத்தியசாலையிலே அனுமதிக்கப்படுகின்றனர். இவ் வைத்தியசாலையும் கேப்பாபிலவில் இருந்து 8 கிலோ மீற்றர் தூரத்திலே அமைந்துள்ளது. அவசர சிகிச்சை பெறுவதற்கும் இவ்விரண்டு வைத்தியசாலைகளுக்கு மாத்திரமே மக்கள் செல்லும் கட்டாய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். போக்குவரத்து வசதியும் குறைவாக காணப்படுகின்ற இப்பிரதேசத்தில் வைத்தியசாலை வசதிகளும் காணப்படாமையானது மக்களை அதிகளவு அசௌகரியங்களுக்கு உள்ளாக்குகின்றது.

**கல்விசார் பிரச்சினைகள்**

கேப்பாபிலவில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட மாதிரி கிராமத்தில் கேப்பாபிலவு அரசினர் தமிழ் கலவன் எனும் தரம் ஐந்து வரையிலான ஆரம்ப நிலை பாடசாலை மாத்திரமே காணப்படுகின்றது. மாதிரி கிராமத்திலுள்ள பாடசாலையின் மாணவர்களின் தொகை பின்வரும் அட்டவணையில் நோக்கலாம்.


அட்டவணை 1.1: கேப்பாபிலவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் எண்ணிக்கை

| மாணவர் விபரம் பால் அடிப்படையில் | எண்ணிக்கை |
|---|---|
| **ஆண்கள்** | 51 |
| **பெண்கள்** | 32 |
| மொத்தம் | **83** |

மூலம்:- கேப்பாபிலவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் அறிக்கை - 2017

இப் பாடசாலையில் 10 ஆசிரியர்கள் மாத்திரமே கடமையாற்றுவதாக நேர்காணலின் போது அதிபர் கேதீஸ்வரன் தெரிவித்தார். இற்றைவரையிலும் புலமைபரிசில் பரீட்சையில் மாணவர்கள் சித்தியடையவில்லை என்றும் அதற்கான காரணம் குடும்ப வறுமை, மாணவர்கள் கல்வியில் ஈடுபாடற்ற நிலைமை மேலும் அடிப்படை வாழ்க்கையில் காணப்படும் பிரச்சினைகளால் பெற்றோர்களுக்கு பிள்ளைகளின் கல்வி தொடர்பான சிந்தனை காணப்படுவதில்லை என அதிபர் தெரிவித்தார். ஐந்தாம் தரத்தை தொடர்ந்து மாணவர்கள் கல்வியை தொடர வேண்டும் எனில் 1 கிலோமீற்றர் தொலைவில் உள்ள வித்தியானந்த பாடசாலை, 3 கிலோமீற்றர் தொலைவில் உள்ள வற்றாப்பளை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மற்றும் அரசினர் தமிழ் கலைமகள் பாடசாலைக்கே செல்ல வேண்டும். ஆனால் அவர்களின் போக்குவரத்து நிலைமகளை நோக்கும் போது இரண்டாம் நிலை கல்வியை தொடர்வது சவாலாகவே காணப்படுகிறது. கேப்பாபிலவு பாடசாலைக்கு மாணவர்கள் சமூகமளிக்கும் முறையை பின்வருமாறு நோக்கலாம்.

வரைபு 1.1: மாணவர்கள் பாடசாலைக்கு சமூகமளிக்கும் விதம்




மூலம்: மூலம்:- கேப்பாபிலவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் அறிக்கை – 2017

20% ஆன மாணவர்களுக்கு மாத்திரமே துவிச்சக்கர வண்டியில் பாடசாலைக்கு செல்லக் கூடிய வாய்ப்பு காணப்படுகிறது. ஏனைய 80% ஆன மாணவர்கள் இரண்டாம் நிலை கல்வியை தொடர

வேறு பாடசாலைகளுக்கு செல்ல போக்குவரத்து பிரச்சினையை எதிர்நோக்கின்றனர். ஏனெனில் கேப்பாபிலவிலிருந்து வற்றாப்பளை, முல்லைத்தீவு பிரதேசங்களுக்கு செல்ல காலை 6 மணிக்கு, பகல் 2 மணிக்கு, மாலை 5 மணிக்கு மாத்திரமே பேரூந்து சேவைகள் காணப்படுகின்றன என நேர்காணலின் போது தெரிவித்தனர். எனவே மாணவர்கள் வேறு பாடசாலைகளுக்கு செல்ல போக்குவரத்து ரீதியான தடைகள் காணப்படுவதால் கல்வியை தொடர்வதில்லை.


**காணிப் பிரச்சினை**

கேப்பாபிலவு வாழ் மக்கள் மீள் குடியமர்த்தப்படும் போது அவர்களுடைய சொந்த இடங்களில் குடியமர்த்தப்படவில்லை. ¼ அளவு பரப்பளவில் மாத்திரமே குடியமர்த்தப்பட்டனர். ஆரம்ப காலம் தொட்டு விவசாயம் மற்றும் பயிர்ச்செய்கையை வாழ்வாதாரமாக கொண்ட இம் மக்களது சொந்த காணி வழங்கப்படாமையால், இவர்களுடைய பொருளாதாரத்தில் பெரும் சரிவை ஏற்படுத்தியது. எனவே மக்கள் பொருளாதார தேவைக்காக மீன்பிடி மற்றும் கூலித்தொழில் செய்கின்றனர். 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கேப்பாபிலவு மக்கள் தமது நிலங்களை கோரி போராட்டம் செய்ததன் விளைவாக 71 குடும்பங்களின் காணி முற்றாகவும், 07 குடும்பங்களின் காணி பகுதியளவிலும் இராணுவம் விடுவித்துள்ளது. இற்றைவரையிலும் 189 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டும் 279 ஏக்கர் காணிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலும் காணப்படுகிறது. மீன்பிடி மற்றும் கூலித் தொழில் மூலமாக போதிய வருமானம் கிடைக்கப் பெறாமையால் மக்கள் விவசாயத்தை மேற்கொள்ள விரும்புகின்றனர். போதியளவு வருமானம் கிடைக்காமையால் கல்வியினை தொடர முடியாமை, அடிப்படையான தேவைகளை முழுமையாக நிறைவேற்ற முடியாத நிலைமையில் மக்கள் காணப்படுவதாலேயே இம் மக்கள் தமது சொந்த நிலப்பகுதியில் குடியேற விரும்புகின்றனர் என்ற கருத்தை என்பதை இலக்கக்குழு கலந்துரையாடலின் போது இனங்காண முடிந்தது.

**உள சமூக பிரச்சினைகள்**

இலங்கையில் வடமாகணத்தை பொறுத்தமட்டில் தமிழர்களின் சாதி செல்வாக்கு அதிகமுள்ள பிரதேசமாகும். கேப்பாபிலவில் குடியமர்த்தப்பட்டோர் முழுமையாக தமிழர்களாவர். அவர்களிலும் வெள்ளாளர், கரையர், நாவலர், பறையர் என சாதி பிரிவினை காணப்படுகின்றது. இதனை அடிப்படையாக கொண்டே மீள்குடியமர்த்தபட்ட பிரதேசமும் பிரிக்கப்பட்டுள்ளது. அத்தோடு வகுப்பு வாதமும் காணப்படுகின்றது. அதிகளவு வெளிநாட்டு உறவினர்களின் உதவியினை பெருவோர் மத்திய தர வர்னக்கத்தினராக காணப்படுகின்றனர். மத்தியதர வர்க்கத்தினராக காணப்பட்ட போதும் இன்னொருவரில் சார்ந்து வாழும் நிலையிலேயுள்ளனர். மேலும் ஆய்வுப்பிரதேசத்தில் 60 பெண் தலைமையிலான குடும்பங்கள் காணப்படுகின்றன.

வரைபு 1.2: பெண்தலைமைக் குடும்பங்களின் விபரம்




மூலம்:- நேர்காணலில் பெறப்பட்ட தகவல் (நேர்காணல் 07)

இவர்களின் 70% குடும்பங்களின் கணவன்மார்கள் போரில் இறந்தவர்களாகவும் 30% ஆன குடும்பத் தலைவர்கள் மனைவி குழந்தைகளை விட்டு சென்றவர்களாகவும் இரண்டாவது திருமணம் செய்தவர்களாகவும் காணப்படுகின்றனர். எனவே குடும்பத்தின் அனைத்து நடவடிக்கைகளும் பெண் தனியாக சமாளிக்க வேண்டிய நிர்பந்த நிலைக்குள்ளாகியுள்ளனர். ஆண் தலைமையிலான குடும்ங்களுடன் ஒப்பிடுகையில் பெண் தலைமையிலான குடும்பங்களின் வருவாய் குறைவாக காணப்படுகிறது. இதனால் இவர்களின் பிள்ளைகள் கல்வியை தொடர முடியாத நிர்பந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

அத்தோடு காணாமல் போனோர் எனும் பட்டியலையும் யுத்தத்தினூடாக மக்கள் சந்தித்த பிரச்சினையாகும். கடத்தப்பட்டவர்கள் உயிருடன் இருக்கிறார்களா, இல்லையா என்பதே இம் மக்களிற்கு இன்றளவிலும் அறிய முடியாத உண்மையாக காணப்படுகின்றது. அவர்கள் தொடர்பான விடயங்களை உறவினர்கள் தற்பொழுதும் தேடிக்கொண்டேயுள்ளனர். மேலும் இறுதி யுத்தம் நடைபெற்ற இடமாகவும், யுத்தத்தினால் அதிகளவு பாதிக்கப்பட்டதாலும் இப்பிரதேசத்தில் அதிகளவு அங்கவீனர்களை உருவாக்கியுள்ளது. 1200 மக்கள் தொகையில் 4% ஆனோர் யுத்தத்தினால் அங்கவீனமானோர்களாவர் என கிராமசேவகர் நேர்காணலின் போது தெரிவித்தார். இவர்களுடைய வாழ்க்கை அவர்களிற்கு மாத்திரமின்றி, குடும்பத்திற்கும் கேள்விக்குரியாக உள்ளது. இவை மட்டுமின்றி போரினால் பாதிக்கப்பட்ட அவர்களுடைய வாழ்விடமும் அதனை நினைவுப்படுத்துவதாக கூறுகின்றனர். யுத்ததின் இத்தகைய சின்னங்கள் மக்களிற்கு மீண்டும் போர் சூழ்நிலையினையே நிழற்படமாக காட்டுகின்றது. எனவே மக்கள் உள ரீதியாக பாதிப்படைவதால் வாழ்கையினை வெறுக்கும் சூழ்நிலைக்கு உள்ளாகின்றனர்.

**ஆய்வு முடிவும் பரிந்துரைகளும்**

யுத்தத்திற்கு பின்னர் மீள்குடியமர்த்தப்பட்டதனால் மீண்டும் ஆரம்பத்திலிருந்து மக்களுடைய வாழ்க்கையினை கட்டமைக்க வேண்டிய நிலையில் காணப்படுகின்றனர். கேப்பாபிலவு பிரதேசத்தினை சேர்ந்த மக்கள் மாதிரி கிராமத்தில் குடியமர்த்தப்பட்ட போதும் அம் மக்களுடைய வாழ்வாதாரம் முழுமையாக பயிர்ச்செய்கையிலே தங்கியுள்ளது. இத்தகைய சூழ்நிலையில் அவர்களுடைய நிலங்களும் பறிக்கப்பட்டிருப்பது அவர்களுடைய வாழ்வாதரத்தை மேலும் கேள்விகுறியாக்கியுள்ளது. அங்கவீனர்களாக காணப்படுவோரினதும் பெண் தலைமையிலான குடும்பங்களினதும் வருவாயும் சவாலிற்குரிய விடயமாகவே காணப்படுகின்றது.

இயல்பான வாழ்கைக்கு ஏற்ற வகையில் உட்கட்டமைப்பு வசதிகளும் செய்யப்படாமையானது மக்களுடைய அன்றாட வாழ்விலும் சிக்கல்களை ஏற்படுத்துகின்றது. இவ்வாறான காரணிகளுடன் காணமல் போனோரின் விடயங்கள் கிடைக்கப்பெறாமை, யுத்தம் உருவாக்கிய அங்கவீனம், போன்ற காரணிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யுத்தத்தின் பாதிப்புக்களை நினைவுப்படுத்துகின்றன. இயல்பான வாழ்க்கைக்கு திரும்புவதில் உள்ள சமூக, வாழ்வாதார பிரச்சினைகளுடன் யுத்த அழிவை மீள் நினைவுப்படுத்தும் விடயங்களும் மக்களின் இயல்பான வாழ்க்கை முறைக்கு எதிராக உள்ளன.

கேப்பாபிலவு மக்களின் வாழ்வாதாரத்தை நெறிப்படுத்துவதே பாரிய பிரச்சினையாக உள்ளது. 189 ஏக்கர் காணிகள் மாத்திரமே மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 279 ஏக்கர் நிலப்பகுதி இராணுவத்தின் கட்டுப்பாட்டிலே உள்ளது.உதவிக் கடன் தொகைகள் வழங்குதல், நிலங்களை மீட்டு கொடுத்தலின் மூலமாக அடிப்படையாக உள்ள வாழ்வாதார பிரச்சினைகளை தீர்க்க முடியும். உதவித் தொகைகள் ஊடாக மக்கள் சுய தொழில் வாய்ப்புக்களை அவர்களாகவே உருவாக்க முடியும். கேப்பாபிலவு மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட பிரதேசங்களின் உட்கட்டமைப்பு வசதிகளின் புனரமைப்பானது இலங்கை அரசாங்க நடவடிக்கைகளை சார்ந்த விடயமாக காணப்படுகின்றது. கேப்பாபிலவு மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதனூடாக அவர்களுடைய இயல்பு வாழ்க்கைக்கு மாற்ற முடியும். அவர்கள் இயல்பான வாழ்க்கையினை பொருளாதார சிக்கல்கள், உட்கட்டமைப்பு பிரச்சினைகள், கல்வி பிரச்சினைகள் போன்றவற்றை தீர்ப்பதனூடாக அவர்களின் மனதில்

நிலைப்பெற்றிருக்கும் யுத்த பாதிப்புக்களை தடங்களை தீர்க்க முடியும். இக் காரணிகள் இரண்டும் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளன. எனவே புலனாகின்ற பிரச்சினைகளை தீர்ப்பதனூடாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட கேப்பாபிலவு மக்களிற்கு யுத்தத்தை நினைவுப்படுத்தும் விடயங்களை மாற்ற முடியும்.

**Reference**


1. Perera, T.G.U.P., Indu Weerassori & Karunaratne, H.M.L.P., "An Evaluation of Success & Faliure in Hambantota, Siribopura Resettlement Housing Program: Lessons Learned, Sri Lanka Journal of Real Estate – issue 06, Department of Estate Management & Valuation, University of Jeyawardanapura

2. Sunil Bastian, (2013), "The Political Economy of Post War Sri Lanka", International Center for Ethnic Studies, Research Paper No 07

3. Shalini Weeraratne, & Wasana Nalawatta, (2016), Reconciliation in Post War Sri Lanka: Issues and Prospects, Proceeding in Defense & Strategic Studies – 9th International Research Conference – KDU

4. Sri Lanka Returns in The East but New Displacement in the North – IDMC Report, Retrieved From www.internal-displacement.org

5. UNHCR – Resettlement Hand Book, (2015), retrieved from /www.unhcr.org/46f7c0ee2.pdf

6. குகபாலன், கா., (1996) "யாழ்ப்பாண இடப்பெயர்வு". கொழும்பு, அட்மிரல் பதிப்பகம்

7. கேப்பாபிலவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர் அறிக்கை - 2017

   செயலாற்றுகை குறிப்புக்கள் - 2015, மீள்குடியேற்ற அமைச்சு, retrieved from http://resettlementmin.gov.lk

9. பிரதேச செயலக அறிக்கை – முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று (2016)


**நேர்காணல்**

1. (நேர்காணல் 01) – எஸ். செல்வரட்ணம் - காவலாளி
2. (நேர்காணல் 02) – சிவப்பிரகாசம் - மீனவர்
3. (நேர்காணல் 03) - இரங்கநாதன் - மீனவர்
4. (நேர்காணல் 04) – ரவிச்சந்திரன் - மீனவர்
5. (நேர்காணல் 05) – சகுந்தலாதேவி – வீட்டுப்பணி
6. (நேர்காணல் 06) – கே. கேதீஸ்வரன் - கேப்பாபிலவு அரசினர் தழிழ் கலவன் பாடசாலை அதிபர்
7. (நேர்காணல் 07) – பிராங்கிளின்- கேப்பாபிலவு கிராம சேவகர்
8. (நேர்காணல் 08) – ரஞ்சி தனராஜ் - சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்